

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாளையங்கோட்டை, சேரன்மகாதேவி,களக்காடு,நாங்குநேரி வள்ளியூர், இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 831 ஊரக குடியிருப்புகளுக்கு ரூபாய் 605 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் தொடர்பாக சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா. சுகுமார் முன்னிலையில் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.



தேனி மாவட்டம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக சிடி ஸ்கேன் எடுக்கும் இயந்திரத்தை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆய்வு செய்தார் உடன்வடக்கு மாவட்ட செயலாளர் தங்கத்தமிழ் செல்வன் எம்.பி. தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. மகாராஜன் எம் எல் ஏ. சரவணகுமார் மற்றும் கழக முன்னோடிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்



பால்வளத் துறை அமைச்சர் த.மனோதங்கராஜ், நேற்று (03.09.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்காக தேர்வு செய்யப்பட்ட 4 நபர்களுக்கு பணிநியமன ஆணையினை வழங்கினார்.



மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு திருமங்கலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை விருந்து வழங்கும் நிகழ்வின் ஒரு பகுதியாக தே.கல்லுப்பட்டி ஒன்றியம் தும்பநாயக்கன்பட்டியில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர்.



விருதுநகர் மாவட்டம் அரசு மருத்துவக் கல்லூரி கூட்ட அரங்கில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் தலைமையாசிரியகளுக்கான மாநில அளவிலான அடைவுத் தேர்வு (SLAS 2025) ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ராஜேந்திரன் தலைமையில், சிவகாசி சார் ஆட்சியர் முகமது இர்பான், முன்னிலையில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு மேற்கொண்டு, தலைமையாசிரியர்களுடன் கலந்துரையாடினார்.



மதுரை கிழக்குத் தொகுதி கொடிக்குளம் ஊராட்சி அரசு நடுநிலைப் பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படதை தொடர்ந்து பள்ளிக்கு சென்ற வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி ஆகியோர் அங்கு புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டிடங்களை திறந்து வைத்து, மாணவ மாணவிகளுக்கு புத்தகங்களை வழங்கி, பள்ளிக்கு இடம் தானமாக வழங்கிய பூரணம்மாளுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்கள். உடன் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரேணுகா, மேலூர் மாவட்ட கல்வி அலுவலர் இந்திரா, ஒன்றிய செயலாளர் அ.பா. ரகுபதி, தலைமைக்கழக வழக்கறிஞர் கலாநிதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இடையக்கோட்டையில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின்திட்ட முகாமில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்.



திருநெல்வேலி டவுணில் இருந்து தெற்கு செழியநல்லூர் சென்ற அரசு பேருந்து மானூர் பள்ளமடை அருகே விபத்துக்குள்ளானதில் 28 பயணிகள் சிக்கினார்கள்.இதில்11பேர் பலத்த காயமடைந்து நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களை முன்னாள் அமைச்சர், கழக சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன்கான் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி பழங்கள் மற்றும் பிரட் ஆகியவற்றை வழங்கினார்.உடன் பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் லி.முகமது மீரான் மைதீன்,கோ.மிக்கேல்,மாவட்ட நவநீதன்,பாலசுப்பிரமணியன், கருப்பசாமி செல்வம்,நித்திய பாலையா, பேட்டை மு.காதர்ஒலி, காஜா முகம்மது சேக்,பாளை பகுதி இளைஞரணி அமைப்பாளர் சூரத் ராம்சேட்,ராபர்ட்,செல்லத்துரை பெரோஸ்கான்,கிங்சிங் ஆகியோர் உள்ளனர்.



நாகர்கோவில் மாநகராட்சி 4 வது வார்டுக்குட்பட்ட ராஜலெட்சுமி பூங்காவில் ரூ 10.00 இலட்சம் மதிப்பீட்டில் திறந்தவெளி கலையரங்கம் அமைக்கும் பணி, 23வது வார்டுக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள ரவுன்டானாவிலிருந்து டதி ஸ்கூல் வரை சாலையின் இருபக்கமும் உள்ள மழைநீர் வடிகால் சீரமைத்து அதன் மீது பொதுமக்கள் சிரமமின்றி நடந்து செல்ல ரூ 40.00 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார தரைகற்களுடன் கூடய நடைபாதை அமைக்கும் பணி ஆகிய பணிகளை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். உடன் மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் மேரி பிரின்ஸி லதா, செல்வகுமார், ஜவஹர், ராஜா, சேக்மீரான், வேல்முருகன், சுரேஷ், முகமது பஷீர், ராஜன், பன்னீர் செல்வம், அனந்த பால், செல்லம், முகமது சாலிஹ், மோகன், அபுபக்கர், சேக் செய்தல், பர்ண்பால் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நாகர்கோவில் மாநகராட்சி பகுதியில்

# ரூ 50.00 இலட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சி பணிகள் துவக்கம்!

### மாவட்ட செயலாளர் மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார்!

நாகர்கோவில், செப்.4–

நாகர்கோவில் மாநகராட்சி 4 வது வார்டுக் குட்பட்ட ராஜ லெட்சுமி பூங்காவில் ரூ 10.00 இலட்சம் மதிப்பீட்டில் திறந்தவெளி கலையரங்கம் அமைக்கும் பணி, 23வது வார்டுக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள ரவுன்டானாவிலிருந்து ஸ்கூல் வரை சாலையின் இருபக்கமும் உள்ள மழைநீர் வடிகால் சீரமைத்து அதன் மீது பொதுமக்கள் சிரமமின்றி நடந்து செல்ல ரூ 40.00 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார தரைகற்களுடன் கூடிய நடைபாதை அமைக்கும் பணியை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார்.

உடன் மாநகராட்சி ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் மேரி பிரின்ஸி லதா, மண்டல தலைவர்கள் செல்வகுமார், ஜவஹர், இளநிலை பொறியாளர் ராஜா, தேவி தி.மு.க. பகுதி செயலாளர் சேக்மீரான், மாநகர துணை செயலாளர் வேல்முருகன், வட்டசெயலாளர் சுரேஷ், கழக நிர்வாகிகள் முகமது பஷீர், ராஜன், பன்னீர் செல்வம், அனந்த பால், செல்லம், முகமது சாலிஹ், மோகன், அபுபக்கர், சேக் செய்தல், பர்ண்பால் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர் தளபதி மு க ஸ்டாலின் அவர்களால் துவங்கப்பட்ட உங்களுடன் ஸ்டாலின் மகத்தான திட்டத்தினை பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி நகராட்சி வார்டு எண் 24,25,26 பகுதிகளில் நடைபெற்ற முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் துவக்கி வைத்து பார்வையிட்டார் நிகழ்வில் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, வடக்கு நகர் கழக செயலாளர் ஜீவரத்தினம், நகர் மன்ற உறுப்பினர் ராதா பூசுத்துரை, முன்னாள் நகர மன்ற உறுப்பினர் போஸ், வட்டச் செயலாளர் வேலவன் மற்றும் முத்துப்பாண்டி, மாவட்ட பிரதிநிதி தியாகராஜன் மற்றும் நகராட்சி துறை சார்ந்த அனைத்து அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.